பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
15 03 2025 **SATURDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடியின் மன்கிபாத் நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து, பொதுமக்கள் தங்களது கருத்துக்களை 28ஆம் தேதிக்குள் தெரிவிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

- மின்னணு பொருட்கள் உற்பத்தி நிறுவனங்களை தமிழகத்தில் ஏற்படுத்த மத்திய அரசு ஊக்கமளிப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

- தமிழக அரசின் வரும் நிதியாண்டிற்கான வேளாண் பட்ஜெட் சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பபட்டது.

- சர்வதேச நுகர்வோர் உரிமை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

- தாய்லாந்து சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaidehi Chaudhari – Shrivalli Bhamidipaty** இணை பட்டம் வென்றது.

**<<<<<<>>>>>>>**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து, பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

நமோ செயலி மற்றும் மைகவ் இணையதளத்தில் வரும் 28ஆம் தேதிவரை பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

1 8 0 0 1 1 7 8 0 0 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவும் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில், வரும் 30ஆம் தேதி காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகவுள்ளது.

<<<<<<>>>>>>

மின்னணு பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக சென்னை வந்த அவர், விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசினார்.

நம் நாட்டின் ஏற்றுமதியில் மின்னணு பொருட்கள் இரண்டாவது இடத்தில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

மின்னணு பொருட்கள் உற்பத்தி நிறுவனங்களை தமிழகத்தில் ஏற்படுத்த மத்திய அரசு ஊக்கமளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று சென்னையில் மின்னணு பொருட்கள் உற்பத்தி நிறுவனத்தை தாம் திறந்து வைக்கவுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை ஐஐடி மற்றும் ரயில்வே துறை இணைந்து உருவாக்கி வரும் அதிவேக ரயில் பயணத்திற்கான **Hyperloop** வசதியையும் ஆய்வு செய்யவுள்ளதாக திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழக அரசின் வரும் நிதியாண்டிற்கான வேளாண் பட்ஜெட் சட்டப்பேரவையில் இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் இதனை தாக்கல் செய்து உரையாற்றினார்.

அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 269 கோடி ரூபாய் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று அவர் அறிவித்தார்.

22 கோடி ரூபாய் செலவில் மலைவாழ் உழவர் முன்னேற்ற திட்டம் செயல்படுத்தப்படும், வேளாண்மையில் புதிய கண்டுபிடிப்புகளுக்கு 1 கோடி ரூபாய் மதிப்பில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி உருவாக்கப்படும், சென்னை, கோவை, தூத்துக்குடி, மதுரையில் இயற்கை வேளாண் விளைபொருட்களுக்கு தரநிர்ணய ஆய்வகங்கள் அமைக்கப்படும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு 10 லட்சம் ரூபாய் வரை பொருளீட்டுக் கடன் வழங்கப்படும், 50 உழவர் சந்தைகளில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும், மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் 56 விற்பனை ஒழுங்குமுறைக் கூடங்கள் ஒருங்கிணைக்கப்படும்,

நீர் ஆதாரத்தை திறம்பட பயன்படுத்துவதற்காக ஆயிரத்து 168 கோடி ரூபாய் செலவில் நுண்ணீர் பாசனம் அமைக்கப்படும்,

பாரம்பரிய காய்கறி ரகங்களின் சாகுபடி 2 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் 2 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்படும்,

ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்,

கரும்பு சாகுபடியை மேம்படுத்துவதற்கான திட்டம் செயல்படுத்தப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வெளியிட்டார்.

<<<<<<>>>>>>>

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள சுனிதா வில்லியம்ஸ், **Butch Wilmore** உள்ளிட்டோரை விண்வெளியிலிருந்து அழைத்து வருவதற்கென விண்கலம் வெற்றிகரமாக செலுத்தப்பட்டுள்ளதாக நாசா கூறியுள்ளது.

இந்த விண்கலம் 28 மணிநேர பயணத்திற்குப் பின்னர் விண்வெளி ஆய்வு மையத்தை எட்டும் என்றும் அதன் பின்னர் சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்டோர் அழைத்துவரப்படவுள்ளதாக இந்திய

அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு. த.வி. வெங்கடேஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - வெங்கடேஸ்வரன் 70 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

சர்வதேச நுகர்வோர் உரிமை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நாளையொட்டி மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், சுற்றுச் சூழலுக்கு உகந்த பொருட்களை குறைந்த செலவில் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

மஹாராஷ்ட்ராவில் அரசு பணியாளர் தேர்வாணையத்தின் சார்பிலான தேர்வுகள், இனி மராத்தி மொழியிலேயே நடத்தப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் அறிவித்துள்ளது.

மஹாராஷ்ட்ர சட்ட மேலவையில் இதற்கான அறிவிப்பை வெளியிட்ட அவர், தற்போது இந்த தேர்வுகள் மராத்தி மற்றும் ஆங்கிலத்தில் நடத்தப்படுவதை சுட்டிக்காட்டினார்.

வேளாண் அறிவியல் தொடர்பான தேர்வுகள் ஆங்கிலத்தில் நடத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றங்கள் ஏற்கனவே உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மராத்தியில் புத்தகங்கள் இல்லாததன் காரணமாகவே, இந்த தேர்வுகள் ஆங்கிலத்திலும் நடத்தப்பட்டதாக அவர் கூறினார்.

தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் இந்தப் புத்தகங்கள் மராத்தியிலும் கொண்டு வரப்படும் என்று கூறிய முதலமைச்சர், இதன் காரணமாக தேர்வாணையத்தின் தேர்வுகள் அனைத்தும் மராத்தியில் நடத்தப்படும் என்றார்.

<<<<<<>>>>>>>

கர்நாடகாவில் அரசு பணிகளுக்கான ஒப்பந்தங்களில் இஸ்லாமியர்களுக்கு 4 சதவீத இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மசோதாவிற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த மசோதா, நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அதிகார வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>>

சர்வதேச பாரா கிளைடிங் திருவிழா கேரளாவின் **Vagamon**–ல் வரும் 19ஆம் தேதி தொடங்கி 23ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

11 நாடுகளைச் சேர்ந்த 86 பேர் இதில் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

உத்ராகண்டில் நேரிட்ட சாலை விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

**Lokhanti** மலைப்பகுதியில் சென்று கொண்டிருந்த கார், பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த இருவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>>

யுக்ரைன் உடனான சண்டை நிறுத்தம் தொடர்பாக ரஷ்ய அதிபருடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்ததாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதன் காரணமாக, ரஷ்யா-யுக்ரைன் இடையேயான மோதல் விரைவில் முடிவுக்கு வரும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, சண்டையை நீடிக்கவே ரஷ்யா விரும்புவதாக யுக்ரைன் குற்றம் சாட்டியுள்ளது.

<<<<<<>>>>>>

தாய்லாந்தில் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த உயர்மட்டப் மேம்பாலம் இடிந்து விழுந்ததில் 5 பேர் உயிரிழந்தனர்.

பாங்காக்கில் நேரிட்ட விபத்தில் 24 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

விபத்துக்கான காரணங்கள் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக அந்நாட்டு காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

ஜார்கண்ட், மேற்குவங்கம், தெலங்கானா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்த இரு தினங்களுக்கு கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்தே காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இப்பகுதிகளில் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அளவிற்கு வெப்பம் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலும் கோடை வெயிலின் தாக்கம் அடுத்த 3 தினங்களுக்கு அதிகரித்தே காணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட் மற்றும் ஜம்மு காஷ்மீரில் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்திற்கு மழை பெய்யக்கூடும் என்றும், சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>>>**

தாய்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaidehi Chaudhari – Shrivalli Bhamidipaty** இணை பட்டம் வென்றது.

இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 6-4, 6-3 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் **Punnin Kovapitukded -** ஜப்பானின் **Yuki Naito** இணையை வென்றது.

**<<<<<<>>>>>>>**

சர்வதேச இணைய செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேஸி பட்டம் வென்றார்.

**<<<<<<>>>>>>>**

பாரிஸில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியில் **Vidit Gujrathi** இறுதிச்சுற்று முன்னேறியுள்ளார்.

**<<<<<<>>>>>>>**

**Billie Jean King** கோப்பைக்கான டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கிதா ரெய்னா, சஹாஜா யமலப்பள்ளி உள்ளிட்டோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி புனே-யில் அடுத்த மாதம் 8ஆம் தேதி தொடங்கி 12ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இந்தியா, நியூஸிலாந்து உட்பட 6 நாடுகள் இதில் பங்கேற்கின்றன.